செ.வெ.எண்:126 நாள்: 27.02.2018

# திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வேளாண்மை கூட்டு பண்ணைய திட்டம் விற்பணையாளர் மற்றும் நுகர்வோர் ஒருங்கிணைப்பு குழு கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி இ.ஆ.ப, அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

---

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் வேளாண்மைத்துறை மூலம் கூட்டு பண்ணைய திட்டத்தில் வேளாண் கருவி விற்பணையாளர் மற்றும் மாவட்ட கூட்டு பண்ணைய குழு ஒருங்கிணைப்பு கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி இ.ஆ.ப, அவர்கள் தலைமையில் இன்று (27.02.2018)நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசியதாவது.

தமிழக அரசு சிறு, குறு விவசாயிகளை ஒருங்கிணைத்து குழுக்களாக உருவாக்கிடவும் அக்குழுக்களை ஒருங்கிணைத்து விவசாய உற்பத்தி குழுக்கள் அமைத்திட கூட்டு பண்ணையம் திட்டத்தினை அறிவித்துள்ளது. திருநெல்வேலி மாவட்டத்தில் 63 சிறு,குறு விவசாயிகள் ஒருங்கிணைந்து. குழுக்களாக உருவாக்கப்பட்டுள்ளது. இக்குழுக்கள் ஒருங்கிணைந்து உயரிய தொழில் நுட்பங்களை உயர் மகசூல் பெறமுடியும் இதன்மூலம் விவசாயிகளின் ஒட்டுமொத்த வருவாய் அதிகரிக்கும். விவசாயிகள் விலை பொருட்களை ஒட்டுமொத்தமாக சந்தைப்படுத்துவதல் நீட்டித்த நிலையான லாபம் பெற சாதகமான சூழல் உருவாகும். இடைதரகர்கள் இன்றி நேரடியாக விவசாயிகளுக்கு விலை பொருட்களுக்கான லாபத்தினை பெற்று தரும் சந்தைப்படுத்தலில் நேரடியாக விவசாயிகளை ஈடுபட வைத்தல் உள்ளிட்ட திட்டங்கள் செயல்படுத்தப்படவுள்ளது.

கூட்டு பண்ணைய திட்டத்தில் உழவர் உற்பத்தியாளர்கள் குழுக்கள் தங்களுக்கு தேவையான பண்ணை கருவிகள், உபகரணங்கள் மற்றும் பண்ணை இயந்திரங்கள் வாங்குவதற்கு அரசு மானியமாக ரூ.5 லட்சத்துடன் குழுக்கள் தங்களின் பங்களிப்பு ரூ 1 லட்சத்திற்கு குறையமால் சேர்த்து வேளாண் கருவிகளை வாங்கி கொள்ளலாம். திருநெல்வேலி மாவட்டத்தில் 4 இடங்களில் உழவர் உற்பத்தியாளர் நிறுவனம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இது விவசாயிகளின் நிறுவனம் போல் செயல்பட வேண்டும். விவசாயிகள் ஒருங்கிணைந்து மொத்தமாக கருவிகளை வாங்குவதால் குறைந்த விலையில் வாங்க வாய்ப்பு உள்ளது. தமிழக அரசின் இத்திட்டத்தினை அனைத்து விவசாயிகளும் சிறப்பாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும. என பேசினார்.

இக்கூட்டத்தில் வேளாண்மை இணை இயக்குநர் திரு.பெருமாள், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) திருமதி.சாந்திராணி, வேளாண் பொறியியல்துறை செயற்பொறியாளர் திரு.முருகன், துணை இயக்குநர்கள் (உழவர் பயிற்சி நிலையம்) திரு.பாலசுப்பிரமணியன், (மத்தியரசு திட்டம்) திரு.உத்தண்டராமன் (தோட்டக்கலை) திரு.அற்புதம் (வணிகம்) திரு. நாகராஜன் மற்றும் வேளாண் கருவிகள் தயார் செய்யும் நிறுவனங்களின் உரிமையாளர், பிரதிநிதிகள் மற்றும் மாவட்ட கூட்டு பண்ணைய குழு விவசாயிகள் கலந்து கொண்டனர்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் திருநெல்வேலி.